பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 09 2024 **MONDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான சர்வதேச முதலீட்டு மாநாட்டையும், கண்காட்சியையும் இன்று தொடங்கிவைக்கிறார்.

2. மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பாஸ்கர் என்ற புதிய டிஜிட்டல் தளத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

4. தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று வெப்பம் அதிகரித்து காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, குஜராத் மாநிலம் காந்தி நகரில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான சர்வதேச முதலீட்டு மாநாட்டையும், கண்காட்சியையும் இன்று தொடங்கிவைக்கிறார்.

மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த மூன்று நாள் மாநாட்டில், பசுமை எரிசக்திக்கான முதலீடு, எதிர்கால எரிசக்தி தேவைகளுக்கான தீர்வுகள், உள்ளிட்டவை தொடர்பாக 40 அமர்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

140 நாடுகளிலிருந்து 25 ஆயிரத்திற்கும் அதிகமான பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்கிறார்கள்.

ஜெர்மனி, ஆஸ்திரேலியா, டென்மார்க், நார்வே உள்ளிட்ட நாடுகள் இந்தியாவுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றன.

மாநாட்டையொட்டி நடைபெறவுள்ள சர்வதேச கண்காட்சியில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பாக நவீன தொழில்நுட்பங்களை அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் காட்சிப்படுத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி, குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல் ஆகியோர் துவக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் பிரதமர் அகமதாபாத் - பூஜ் இடையிலான வந்தேபாரத் ரயில் சேவையை தொடங்கிவைக்கிறார்.

மேலும், எட்டாயிரம் கோடி ரூபாய மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடங்கிவைப்பதோடு, அரசு நலத்திட்டங்களில் பயனடைந்த பயனாளிகளுடன் கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளார்.

<<<<<>>>>

தரமான கல்வி வழங்குவதன் மூலம் நாடு மிக விரைவில் வளர்ந்த நாடாக மாறும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

நாக்பூரில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்களுக்கு கல்வியை வழங்குவதைவிட மிகப்பெரிய பரிசு எதுவும் இருக்க முடியாது என்று கூறினார்.

தரமான கல்வியே –தரமான ஜனநாயகத்தை வரையறுக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா பின்தங்கிய நாடு அல்ல என்றும், மிக விரைவாக வளர்ச்சியடைந்து வரும் நாடு என்றும் இந்தியாவின் வளர்ச்சியை இனி எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

பொருளாதார ரீதியாகவும் இந்தியா வளர்ந்து வருவதாகவும், உலகில் முதலீட்டு வாய்ப்புக்களுக்கான சிறந்த நாடாக இந்தியா விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா திகழ்வதாக உலக வங்கி பாராட்டியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிஜிட்டல் மயமாக்கத்தால் விவசாயிகள் உட்பட மத்திய அரசின் நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு நேரடியாக சென்றடைகிறது என்றும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தை அடுத்த நல்லூர் கிராமத்தில் சங்கரா மகளிர் செவிலியர் கல்லூரியை நேற்று திறந்து வைத்து அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 112 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடுமுழுவதும் 150 செவிலியர் பயிற்சி பள்ளிகள் கல்லூரிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 250 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்படி, ஒரு செவிலியர் பள்ளியை கல்லூரியாக தரம் உயர்த்துவதற்கு 7 கோடி ரூபாய் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான உச்சவரம்பின்றி மருத்துவ காப்பீடு வழங்குவதற்கு, மத்திய அமைச்சரவை அண்மையில் அனுமதி அளித்ததையும் திருமதி. நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி மீட்கப்பட்ட கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 30 பேர் புதுதில்லியிலிருந்து விமானம் மூலம் சென்னை அழைத்து வரப்படவுள்ளனர்.

ஆன்மிக பயணம் மேற்கொண்ட இவர்கள், நிலச்சரிவில் சிக்கிய தகவல் அறிந்து தமிழக அரசு, உத்தாகண்ட் மாநில அரசின் உதவியுடன் மீட்டது.

தற்போது உத்தராகண்ட் மாநிலத்தில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 30 பேருக்கும் உணவு, தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறை ஸ்டார்ட் அப் சூழலை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு பாஸ்கர் என்ற டிஜிட்டல் தளத்தை தொடங்கியுள்ளது.

ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டிகள், சேவை வழங்குபவர்கள், அரசு நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்கள் இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்த டிஜிட்டல் தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் அப் துறையிலும் இந்தியாவை உலகில் முதன்மையான நாடாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முன் முயற்சி இது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>

சென்னையில் நீர்நிலைகளில் கட்டுமானக்கழிவுகள் கொட்டப்படுவதை தடுப்பதற்காக கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி ஆணையர் திரு குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், நீர்நிலைகளில் கொட்டப்படும் கட்டுமான கழிவுகளால் மழைக்காலங்களில் அடைப்பை ஏற்படுத்தி வெள்ள பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கட்டுமானக்கழிவுகளை கொட்ட வேண்டும் என்றும், விதிகளை மீறி பொது இடங்கள் மற்றும் நீர்நிலைகளில் கட்டுமானக்கழிவுகளை கொட்டினால் 500 ரூபாய் முதல், ஐந்தாயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

<<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் அருந்தி கடந்த ஜூன் மாதம் 68 பேர் உயிரிழந்தது தொடர்பாக, மேலும் மூன்று பேர் குண்டர் தடுப்புச்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மெத்தனால் விற்பனை செய்தது தொடர்பாக, சிபிசிஐடி காவல்துறையினர் ஏற்கனவே 24 பேரை கைது செய்து, கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், 11 பேர் குண்டர் தடுப்புச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று மேலும் மூன்று பேரை குண்டர் தடுப்புச்சட்டத்தில் கைது செய்ய கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர், காவல்துறைக்கு உத்தரவிட்டார்.

<<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் ஜம்மு காஷ்மீரில் முதல் கட்ட பிரச்சாரம் இன்று மாலை முடிவடைகிறது.

அங்கு மூன்று கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதல்கட்டமாக 24 தொகுதிகளில் நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

ஏழு மாவட்டங்களுக்கு உட்பட்ட அந்த தொகுதிகளில் அரசியல் கட்சித்தலைவர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாவது கட்டத்தேர்தல் இம்மாதம் 25-ஆம் தேதியும், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் அடுத்த மாதம் ஒன்றாம் தேதியும் நடைபெறவுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு நீக்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதல் தேர்தல் இதுவாகும்.

<<<<<>>>>

தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 37 முதல் 38 டிகிரி செல்சியஸையொட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸ்ஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் உள்ள கோல்ஃப் கிளப் ஒன்றில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு சத்தம் கேட்டதாகவும், தாம் பாதுகாப்பாக இருப்பதாகவும் அந்நாட்டின் முன்னாள் அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

---------------

லெபனான் எல்லையில் இஸ்ரேல் தாக்குதல் நடத்த உள்ள நிலையில், அந்த பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு விமானம் மூலம் இஸ்ரேல் ராணுவம் நோட்டீஸ் வீசியது.

-----------------

**Yagi** புயலால் பாதிக்கப்பட்ட வியட்நாம் மற்றும் மியான்மர் நாடுகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா நிவாரணப்பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

-------------

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் கிராம பாதுகாப்பு குழுவினருக்கு ராணுவத்தினரும், காவல்துறையினரும் இணைந்து துப்பாக்கிச்சூடு பயிற்சி அளித்தனர்.

---------------------

ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்றிரவு ஏற்பட்ட சாலை விபத்தில், எட்டு பேர் உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்தனர்.

----------------

சென்னையில் நேற்று விநாயகர் சிலை கரைப்பு நிகழ்வுகள் அமைதியாக நடைபெற்று முடிந்ததாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

----------------

திருநெல்வேலி அருகே முண்ணீர்பள்ளம் பகுதியில் உள்ள பாசன கால்வாயில் குளித்துக்கொண்டிருந்த மாணவர்கள் மூன்று பேர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

---------------

ஓணம் பண்டிகையையொட்டி, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் சுமார் இரண்டு டன் மலர்களை கொண்டு உருவாக்கப்பட்ட அத்தப்பூ கோலத்தை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.

----------------------

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி தூய ஆரோக்கிய அன்னை திருத்தலத்தில் ஆண்டு திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

-----------------

ஒகேனக்கல் அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், சுற்றுலாப்பயணிகள் அருவியில் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

**<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Hulunbuir**-ல் இப்போட்டி இந்திய நேரப்படி மாலை மணி 3.30-க்கு தொடங்க உள்ளது.

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கி போட்டியில் ஒரு போட்டியில் கூட தோல்வியடையாத இந்தியா, சீனா, ஜப்பான், மலேசியா, கொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை வென்றது.

மற்றொரு அரையிறுதியில் பாகிஸ்தான் - சீனாவை எதிர்கொள்கிறது.

-----------------

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்றுவரும், செஸ் ஒலிம்பியாட் போட்டியில், இந்திய ஆடவர் அணி - அஜர்பைஜானுக்கு எதிரான ஆட்டத்தில் 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

மகளிர் பிரிவு ஐந்தாவது சுற்றில் இந்தியா – கஜகஸ்தானை வென்றது.

ஓபன் பிரிவில் இந்திய வீரர் குகேஷ் எளிதாக வெற்றிபெற்றார்.

அஜர்பைஜானின் **Nijat Abasov** –க்கு எதிரான ஆட்டத்தில், இந்தியாவின் பிரக்யானந்தா வெற்றிபெற்றார்.

மகளிர் பிரிவில் வைஷாலி வெற்றிபெற்றார்.

செஸ் ஒலிம்பியாட்டில் இன்னும் ஆறு சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

<<<<<>>>>